இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 47 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – புரட்டாசி 09 – புதன்கிழமை 25 செப்டம்பர் 2024 – கோவை ★★ 12 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 47: Thiruvalluvar Year - 2055 - Purataasi 09 - Wednesday 25 September 2024 - Kovai ★★ 12 Pages ₹ 5.00

## அனைவருக்கும் சொந்தமானவராக விளங்கியவர் - வழிகாட்டியவர்!

# இந்தியாவின் கருத்தியல் அடையாளங்களில் ஒருவர் - தோழர் யெச்சூரி !

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – சீத்தாராம் யெச்சூரியின் நினைவேந்தல் நிகழ்ச்சியில் புகழுரை!

சென்னை, செப்.25-

**மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்தியப் பொதுச் செயலாளர் மறைந்த சீத்தாராம் யெச்சூரியின் படத் திறப்பு மற்றும் நினைவேந்தல் நிகழ்ச்சியில், கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில், "தோழர் யெச்சூரி அவர்கள் நம் அனைவருக்கும் சொந்தமானவராக விளங்கியவர், வழிகாட்டியாக வாழ்ந்து காட்டியவர்" எனவும், "இந்தியாவின் கருத்தியல் அடையாளங்களில் ஒருவராகத் திகழ்ந்தவர் யெச்சூரி அவர்கள்" எனவும் புகழாரம் சூட்டினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23.09.2024) சென்னை, காமராஜர் அரங்கத்தில் நடைபெற்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் மறைந்த தோழர் சீத்தாராம் யெச்சூரி அவர்களின் படத்திறப்பு மற்றும் நினைவேந்தல் நிகழ்ச்சியில் ஆற்றிய உரை வருமாறு:-

நம்முடைய இனிய தோழர் மதிப்பிற்குரிய சீதாராம் யெச்சூரி அவர்களின் மறைவு, என்னை அதிர்ச்சி அடைய வைத்தது. அவருடைய உடல்நலம் பாதிக்கப்பட்டு இருந்த போதே, நான் அமெரிக்காவில் இருந்து தொடர்பு கொண்டு தொடர்ந்து அவரைப்பற்றி விசாரித்துக்கொண்டே இருந்தேன். எப்படியாவது உடல்நலம் பெற்று அவர் திரும்பிவிடுவார் என்று தான் நம்பிக் கொண்டிருந்தோம். ஆனால், நம் எல்லோரையும் வருத்தமடைய செய்யும் வகையில், அவர் நம்மை எல்லாம் விட்டு பிரிந்து விட்டார் என்ற சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23.9.2024) சென்னை, காமராஜர் அரங்கில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் மறைந்த தோழர் சீத்தாராம் யெச்சூரி அவர்களின் படத்திறப்பு மற்றும் நினைவேந்தல் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் கே.என். நேரு, க. பொன்முடி, செஞ்சி கே.எஸ், மஸ்தான், திராவிடர் கழகத் தலைலர் கி. வீரமணி, மக்களவை கழகக் குழுத் தலைவர் டி.ஆர். பாலு எம்.பி., மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக்குழுவின் அசோக் தாவ்லே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் கே. பாலகிருஷ்ணன், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கு. செல்வப்பெருந்தகை, ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ எம்.பி., இந்து குழுமத்தின் இயக்குநர் என். ராம், வி.சி.க. தலைவர் தொல் திருமாவளவன் எம்.பி., இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா. முத்தரசன், முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் டி.கே. ரங்கராஜன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாநில செயலாளர் ஜி. இராமகிருஷ்ணன், இந்திய யூனியன் முஸ்லீக் லீக் தேசிய தலைவர் காதர் மொய்தின், மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் லிபரேசன் கட்சி மாநில செயலாளர் பழ. ஆசைத்தம்பி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் குழு உறுப்பினர் திருமதி உ. வாசுகி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### தி.மு.க. சார்பில் நேரில் சென்று அஞ்சலி!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு அவர்களும், கழகத்தின் துணை பொதுச் செயலாளர்கள் ஆ.ராசா அவர்களும், என்னுடைய தங்கை கனிமொழி கருணாநிதி அவர்களும், இளைஞரணிச் செயலாளர் தம்பி உதயநிதி அவர்களும் நேரடியாகச் சென்று அவருக்கு அஞ்சலி செலுத்தியிருக்கிறார்கள். நான் வெளிநாட்டில் இருந்து மறுநாள்தான் சென்னை வந்து சேர்ந்தேன். அதற்குப் பிறகு நம்முடைய பாலகிருஷ்ணன் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு நான் அலுவலகத்திற்கு வருகிறேன்; அவருடைய திருவுருவப் படத்திற்கு மரியாதை செய்யவேண்டும் என்று சொல்லிவிட்டுச் சென்றேன். அதற்குப் பிறகு அவருக்கு அஞ்சலி செலுத்தினேன்.

தோழர் யெச்சூரி அவர்கள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு மட்டும் சொந்தமல்ல! எங்களுக்கும் சொந்தம். அனைவருக்கும் சொந்தம். எல்லோருக்கும் சொந்தமானவராக அவர் விளங்கினார். வாழ்ந்தார். வாழ்ந்து காட்டியிருக்கிறார். எடுத்துக்காட்டியிருக்கிறார். வழிகாட்டியிருக்கிறார். இந்தியாவின் கருத்தியல் அடையாளங்களில் ஒருவராக இருக்கிறார் என்றால் நிச்சயமாக நாம் அவரைத்தான் குறிப்பிடவேண்டும். அவரின் இழப்பு என்பது ஒரு கருத்தியலுக்கான இழப்பாக அமைந்துவிட்டது!

> **"கல்வியையும், அதன் மூலம் பயின்ற அரசியலையும் சமூக மாற்றத்துக்காக பயன்படுத்தியவர் தோழர் சீதாராம் யெச்சூரி அவர்கள். மதச்சார்பற்ற இந்தியாவை உருவாக்க வேண்டும், சகோதரத்துவ இந்தியாவை உருவாக்க வேண்டும், சமூக நீதி இந்தியாவை உருவாக்க வேண்டும். இதை எல்லாவற்றையும் உள்ளடக்கிய சமதர்ம இந்தியாவை உருவாக்க வேண்டும் என்பதற்காக நாம் அனைவரும் அவர் வழியிலே நின்று பணியாற்ற வேண்டும்"**

### கோவையில் கலைஞர் நடத்திய செம்மொழி மாநாட்டில் யெச்சூரி உரை!

இந்த நேரத்தில், தோழர் சீதாராம் யெச்சூரியைப் பற்றி நான் சொல்ல வேண்டும் என்று சொன்னால், என்னுடைய நினைவிற்கு வருவது நம்முடைய கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில், கோவையில் செம்மொழி மாநாடு நடத்தப்பட்டது. அந்த மாநாடுதான் இப்போது என்னுடைய நினைவுக்கு வருகிறது. முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் நடத்திய அந்த செம்மொழி மாநாட்டில், தோழர் யெச்சூரி அவர்கள் பேசுகிறபோது குறிப்பிட்டுச் சொன்னார். "தமிழ்நாட்டில் எனக்கு ஒரு பங்குண்டு" என்று தோழர் யெச்சூரி ஆற்றிய உரைதான் என்னுடைய நினைவிற்கு வருகிறது.

நம்முடைய தோழர் பாலகிருஷ்ணன் அவர்கள் தெரிவித்ததுபோல, 2015-இல் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் புதிய பொதுச் செயலாளராக தோழர் சீதாராம் யெச்சூரி தேர்ந்தெடுக்கப்பட்டார். "நம் முன் உள்ள முக்கிய பணி, இடதுசாரிகளையும், ஜனநாயகச் சக்திகளையும் ஒருங்கிணைப்பது தான்" என்று பேசினார். தோழர் சீதாராம் யெச்சூரி ஆற்றிய அந்த உரையை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பாராட்டினார்.

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் மறைவிற்கு பிறகு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், இரங்கற் கூட்ட நிகழ்ச்சிகளை ஒவ்வொரு மாவட்டமாக நடத்தினோம். அதில் ஒன்று திமுக நடத்திய "தெற்கில் உதித்தெழுந்த சூரியன்" புகழஞ்சலிக் கூட்டம் ஒன்று. அந்த நிகழ்ச்சியில், அகில இந்தியத் தலைவர்கள் எல்லாம் பங்கேற்றார்கள். அந்த நிகழ்ச்சியின்போது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தோழர் சீதாராம் யெச்சூரி அவர்கள் பங்கேற்று கலைஞர் அவர்களை பற்றி போற்றி புகழ்ந்து பேசினார்.

### கலைஞரைப் பற்றி புகழ்ந்து பெருமையாகப் பேசிய யெச்சூரி!

யெச்சூரி அவர்கள் பேசுகிறபோது குறிப்பிட்டார். சென்னையில் பிறந்த அவருக்கு தமிழ் பேசத் தெரியும் என்றாலும், மற்ற மாநிலங்களில் வந்திருக்கக்கூடிய தலைவர்களுக்கு புரியாது என்று ஆங்கிலத்தில் முழுமையாக பேசினார்.

தொடர்ச்சி 2–ஆம் பக்கம்

---

## தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியத்தில்

# 48 பொறியாளர்களுக்கு பணி நியமன ஆணைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, செப். 25–

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23.9.2024) தலைமைச் செயலகத்தில், சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை சார்பில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக உதவி வனப்பாது காவலர் பணியிடத்திற்கு தெரிவு செய்யப்பட்ட 9 நபர்களுக்கும், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் உதவிப் பொறியாளர் பணியிடத்திற்கு தெரிவு செய்யப்பட்ட 48 நபர்களில், 5 நபர்களுக்கும் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

தமிழ்நாட்டிலுள்ள வனம் மற்றும் வன உயிரின வளத்தை சமுதாய பங்களிப்பு, புதுமையான முயற்சிகள், மக்கள் ஒத்துழைப்பு மற்றும் அறிவியல் சார்ந்த முறையில் பாதுகாப்பதும், வளமான மற்றும் மீள்தன்மை உடைய வனங்களை உருவாக்குவதே தமிழ்நாடு அரசின் தொலைநோக்கு திட்டமாகும். வன வளம் மற்றும் வன உயிரின வளங்களை நன்முறையில் மேலாண்மை செய்திட வனத்துறையிலுள்ள பணியாளர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சிகள் மற்றும் தேவையான உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த வனத்துறையின் பணிகளில் தொய்வு ஏற்படாவண்ணம் காலிப்பணியிடங்கள் தமிழ்நாடு அரசால் உடனுக்குடன் நிரப்பப்பட்டு வருகிறது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இதுநாள் வரை வனத்துறையில் உதவி வனப் பாதுகாவலர், வனத்தொழில் பழகுநர், உதவியாளர், இளநிலை உதவியாளர், சுருக்கெழுத்து தட்டச்சர் போன்ற பணியிடங்களுக்கு 154 நபர்களும், கருணை அடிப்படையில் 164 நபர்களும், என மொத்தம் 318 நபர்கள் பணிநியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும், 308 வேட்டைத் தடுப்புக் காவலர்கள் பணியிலிருந்து வனக்காவலர்களாக பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

### உதவி வனப்பாதுகாவலர் பணியிடத்திற்கான பணிநியமன ஆணைகள் வழங்குதல்

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக உதவி வனப்பாதுகாவலர் பணியிடத்திற்கு தெரிவு செய்யப்பட்ட 9 நபர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

உதவி வனப் பாதுகாவலர்கள் வனப் பாதுகாப்பு மற்றும் வன உயிரினப் பாதுகாப்பு, வனப் பாதுகாப்பு சட்ட செயலாக்கம், வன நிர்ணயப் பணிகள், தீ தடுப்புப் பணிகள், கிராம வனக் குழுக்களின் செயல்பாடுகளை கண்காணித்தல், வன நிர்வாக பணிகளில் மாவட்ட வன அலுவலர் / வனப் பாதுகாவலர் / தலைமை வனப் பாதுகாவலர் உள்ளிட்ட அலுவலர்களுக்கு உதவியாக இருப்பார்கள்.

### தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தில் உதவி பொறியாளர் பணியிடத்திற்கான பணி நியமன ஆணைகள் வழங்குதல்

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இதுநாள் வரை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தில் உதவி பொறியாளர், சுற்றுச்சூழல் விஞ்ஞானி, கள உதவியாளர், அலுவலக உதவியாளர் போன்ற பணியிடங்களுக்கு மொத்தம் 167 நபர்கள் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

அதன் தொடர்ச்சியாக, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தில் உதவி பொறியாளர் பணியிடத்திற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக தெரிவு செய்யப்பட்ட 48 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் 5 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

உதவி பொறியாளர்கள், காற்று மற்றும் நீர் மாசு தடுப்பு சட்டங்களின் கீழ் தங்களின் உட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள தொழிற்சாலைகளால் வரம்புக்கு இசைவாணைக்காக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களை பரிசீலித்து, அத்தொழிற்சாலைகளில் தளஆய்வு மேற்கொண்டு உரிய இசைவாணை கட்டணம் மற்றும் பரிந்துரைகளுடன் ஆய்வறிக்கையினை மேல்நடவடிக்கைக்காக சமர்ப்பித்தல், புதிய தொழிற்சாலைகள் மற்றும் மாசு கட்டுப்பாடு வாரிய இசைவாணையின்றி இயங்கும் தொழிற்சாலைகளை கண்டறிந்து வாரிய இசைவாணை பெற நடவடிக்கை மேற்கொள்ளுதல், தொழிற்சாலைகளின் கழிவுநீர் மாதிரிகள் சேகரித்து ஆய்வகங்களுக்கு பகுப்பாய்வுக்கு அனுப்புதல், மாவட்ட மற்றும் மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களுடன் இணைந்து காற்று மாதிரி ஆய்வு மேற்கொள்ளுதல் போன்ற பல்வேறு பணிகளை மேற்கொள்வார்கள்.

இந்நிகழ்ச்சியில், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் விஜயந்திர சிங் மாலிக், முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (ஆராய்ச்சி) செல்வி மீதா பானர்ஜி, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய உறுப்பினர் செயலர் ஆர். கண்ணன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

